இணைப்பு I

(389-ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 388-க்கான விடையைக் காண்க.)

(1) உசிலம்பட்டித் தொகுதியில் உசிலம்பட்டி பேரூராட்சியும் அதனைச் சார்ந்த குடியிருப்புகளும், செல்லம்பட்டி பேரூராட்சியும், அதனைச் சார்ந்த குடியிருப்பு களும் அடங்கும்.

(2) ஆயுள் காப்பீட்டுக் கழக நிதியுதவியுடன் நிறைவேற்றப் படும் உசிலம்பட்டி பேரூராட்சிக்கான குடிநீர்த் திட்டம் செயலாக்கத்தில் உள்ளது. இதற்கிடையில் ஒரு முன்னோடி குடிநீர்த் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(3) உசிலம்பட்டி ஒன்றியத்தில் 63 குடியிருப்புகளிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 49 குடியிருப்புகளிலும் கையிறைப் பான் மற்றும் மின்னிறைப்பான்கள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறுவப்பெற்றுள்ளன.

(4) வறட்சி நிவாரணப்பணிகளின்கீழ் உசிலம்பட்டி ஒன்றியத்தில் 5 குடியிருப்புகளிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 5 குடியிருப்புகளிலும் கையிறைப்பான்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(5) (1986-87 ஆம் ஆண்டு) ஊரகக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் உசிலம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 12 குடியிருப்புகளிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் உள்ள 8 குடியிருப்புகளிலும் நடப்பாண்டில் கையிறைப்பான்கள் அமைக்கப்பட உள்ளன.

(6) இவை தவிர, உசிலம்பட்டி ஒன்றியத்தில் 14 குடியிருப்பு களிலும், செல்லம்பட்டி ஒன்றியத்தில் 8 குடியிருப்புகளிலும் பொய்த்துப்போன கிணறுகளுக்குப் பதிலாக மாற்று ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பெற உள்ளன.

(7) உசிலம்பட்டி ஒன்றியத்தில் 5 கிராமங்களிலும், செல்லம் பட்டி ஒன்றியத்தில் 2 குடியிருப்புகளிலும் நீராதாரங்களை கண்டறியும் பணி முடிவுற்றதும். கையிறைப்பான்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.